ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

# பெரியபட்டர், ஸ்ரீராமப்பிள்ளை – வருஷதிருட்சத்திரம் - வைகாசி – அனுஷம்



பெரியபட்டர் - திருவடியில் நஞ்சீயர்
புகைப்பட உதவி - ஸ்ரீ உ.வே பத்ரி பராசர பட்டர் ஸ்வாமி, ஸ்ரீரங்கம்

அவதாரஸ்தலம் - திருவரங்கம்
திருத்தகப்பனார் - ஸ்ரீகூரத்தாழ்வான்
திருத்தாயார் - ஸ்ரீஆண்டாள்
பராசரபட்டர் திருக்குமாரர் - நடுவல் திருவீதிபட்டர்
ஆசாரியன் - ஸ்ரீ எம்பார்
சிஷ்யர் - நஞ்சீயர்

## பெரிய பட்டார் - ஸ்ரீபராசர பட்டர்

### தனியன்

மாதவே மாஸ்யநுராதா ஜாதம் பட்டார்ய தேஸிகம் /
கோவிந்த குருபாதாப்ஜப்ருங்கராஜ மஹம்பஜே //

ஸ்ரீபராஸரபட்டார்ய: ஸ்ரீரங்கேஸபுரோஹித: /
ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமாந் ஸ்ரேயஸே மேSஸ்து பூயஸே //

## ஸ்ரீராமப்பிள்ளை - ஸ்ரீவேதவியஸா பட்டர்

### தனியன்

கூரேஸ நந்தநம் வந்தே வ்யாஸாம்ஸம் ரங்கவாஸிநம் /
அநூராதே துவைஸாகே ஜாதம் ஸ்ரீராமதேஸிகம் //

ஸ்ரீவேதவ்யாஸ பட்டார்யம் ஸ்ரீரங்க ஸ்தலவாஸிநம் /
ஸ்ரீவத்ஸசிஹ்நஸத்புத்ரம் வந்தே ஸ்ரீராமதேஸிகம் //

## பட்டரை போற்றியுரைக்கும் உபதேசரத்தினமாலை 42ஆம் பாசுரம்

தஞ்சீரை ஞானியர்கள் தாம்புகழும் வேதாந்தி
நஞ்சீயர் தாம் பட்டர் நல்லருளால் - எஞ்சாத
ஆர்வமுடன் மாறன் மறைப் பொருளை ஆயந்துரைத்தது
ஏர் ஒன்பதினாயிரம்.

## ஸ்ரீபராசுரபட்டர் அருளியச்செய்துள்ள தனியன்கள்

### ஆழ்வார்கள் விஷயமாக

பூதம் ஸரஸ்ய மஹததாஹ்வய பட்டநாத:
ஸ்ரீபக்திஸார குலஸேகர யோகிவாஹாந் /
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீமத்பராங்குஸமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் //

## திருப்பாவை

நீளா துங்கஸ்தநகிரி தடீஸுப்தம் உத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ஸ்ருதி ஸதஸிரஸ் ஸித்தமத்யாபயந்தீ /
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாளஸ்து பூய: //

## திருவாய்மொழி

வான்திகழும்சோலை மதிளரங்கர் வண்புகழமேல்
ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும் - ஈன்ற
முதல்தாய் சடகோமன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தா யிராமானுசன்.

மிக்க விறை நிலையும் மெய்யாமுயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித் - தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையு மோதும் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்.

## ஸ்ரீராமப்பிள்ளை அருளியச்செய்துள்ள நான்முகன் திருவந்தாதி தனியன்

நாராயணன் படைத்தான் நான்முகனை. நான்முகனுக்கு
ஏரார் சிவன் பிறந்தா னென்னும்சொல் - சீரார்
மொழி செப்பி வாழலாம் நெஞ்சமே. மொய்பூ
மழிசைப் பரனடியே வாழ்த்து.

## பெரிய பட்டர் வாழித்திருநாமம்

தென்னரங்கர் மைந்தன் எனச் சிறக்க வந்தோன் வாழியே
திருநெடுந்தாண்டகப் பொருளைச் செப்புமவன் வாழியே
அன்னவயல் பூதுரான் அடி பணிந்தோன் வாழியே
அநவரதம் எம்பாருக்கு ஆட்செய்வோன் வாழியே
மன்னு திருக்கூரனார் வளமுரைப்போன் வாழியே
வைகாசி அனுடத்தில் வந்துதித்தான் வாழியே
பன்னுகலை நால்வேதப் பயன் தெரிந்தோன் வாழியே
பராசரனாம் சீர் பட்டர் பார் உலகில் வாழியே.

## ஸ்ரீராமப்பிள்ளை வாழித்திருநாமம்

தெண்டிரைசூழ் திருவரங்கம் செழிக்க வந்தோன் வாழியே
தென்னரங்கர் மைந்தன் எனச் சிறக்க வந்தோன் வாழியே
பண்டிதராம் எதிராசர் பதம் பணிந்தோன் வாழியே
பாடியத்தின் உட்பொருளைப் பகர்ந்துரைப்போன் வாழியே
மண்டுபுகழ்க் கூரனார் மகிழ்ந்த செல்வன் வாழியே
வைகாசி அனுடத்தில் பாருதித்தான் வாழியே
எண்டிசையும் சீரெம்பார் பதம் பணிந்தோன் வாழியே
எழில் சீராமப்பிள்ளை இணையடிகள் வாழியே.

## ஸ்ரீபராசர பட்டர் அருளிச்செய்த க்ரந்தங்கள்

ஸ்ரீரங்கநாத ஸ்தோஸ்த்திரம், ஸ்ரீரங்கராஜ்தவம், அஷ்டஸ்லோகி, ஸ்ரீகுணரத்னகோசம், கைசிகபுராண வியாக்யானம், மைவண்ணநறுங்குஞ்சி – திருநெடுந்தாண்டக பாசுர வ்யாக்யானம், பவத் குணதர்ப்பணம் - ஸ்ரீவிஷ்ணு ஸகஸ்ரநாம ஸ்லோகங்களை விவரிக்கிறது. நம்பெருமாள் திருமஞ்சனம் கண்டுருளும் பல சமயங்களில் பட்டர் அவ்வழகிலே மிகவும் ஈடுபட்டு வெவ்வேறு சமயங்களில் அருளிச்செய்த புகழ்த்தொடர்கள் (கட்டியம்) இன்றும் வழக்கில் உள்ளன. தத்வரத்நாகரம், பிரணவவிவரணம், க்ரியாதீபம், தத்வத்ரயச்லோகம் முதலாக இவர் செய்தருளிய வடநூல்கள் பலவுண்டு. மேலும் பல நூல்கள் இயற்றியுள்ளார். அவைகள் தற்சமயம் கிடைக்கவில்லை.

## எம்பெருமானார் எம்பாரை பட்டருக்கு ஆசார்யராக நியமித்தல்

கூரத்தாழ்வானும் ஆண்டாளும் நம்பெருமாள் அமுதுசெய்த அக்கார அடிசல் சாதம் உண்டதால் இருபிள்ளைகள் அவர்களுக்கு திவவதரித்தனர். இதைக்கேட்டு மகிழ்ந்த எம்பெருமானார் அக்குழந்தை பிறந்த பதிணோராம் நாளிலே எம்பாருடனும் மற்ற சிஷ்யர்களுடனும் ஆழ்வான் திருமாளிகைக்குச் சென்றார். எம்பாரை நோக்கி குழந்தைகளை இங்கு கொண்டு வாரும் என்று சொன்னார். அங்ஙனமே பிரபந்நகுலக் கொழுந்தான அக்குழந்தைகளை எம்பார் எடுத்துவரும்போது திருஷ்டி தோஷாதிகள் வராதபடி ரசைஷயாக த்வயத்தை அநுசந்தித்து வாழ்த்திக் கொண்டே எம்பெருமானார்க்குக் காட்டினார். அவர் ஆனந்தக் கண்ணீர் மல்க குழந்தைகளை குளிரக்கடாசஷித்து எம்பாரிடம் `இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே ! இங்ஙனம் ஆகுமாறு என்ன செய்தீர்' என்று கேட்க, எம்பார் அதற்கு `அந்த குழந்தைகளுக்கு காப்பாக த்வயாநுசந்தாநஞ்செய்து கொண்டு வந்தேன்' என்ற சொன்னார். உடையவர் மிக உகந்து அவரைப்பார்த்து `அக்குழந்தைகள் உய்வதற்கான செய்கையை செய்வதற்கு முற்பட்டீராதலால் இவர்களுக்கு நீரே ஆசார்யராகக்கடவீர்' என்று நியமித்தார்.

நாமகரண சமயத்தில் எம்பெருமானார் பெரிய குழந்தைக்கு பராசர பட்டர் என்றும் சிறிய குழந்தைக்கு வேதவியாஸ பட்டர் என்றும் திருநாமம் சாற்றினார். இதன் மூலம் ஆளவந்தாரின் இரண்டாவது மனக்குறையை பூர்த்தி செய்தார்.

## ஸ்ரீரங்கநாதன் பட்டரை புத்திரனாக அங்கீகரித்தல்

இளம் குழந்தைப்பருவத்திலே ஸ்ரீரங்கநாதன் பட்டரை புத்திரனாக அங்கீகரித்து தம்முடைய சந்நிதியிலே திருமணத்தூணின் அருகே தொட்டிலில் இடுவித்து ஸ்ரீரங்கநாச்சியாரும் தாமுமாகச் சீராட்டி வளர்த்தார்கள். அங்ஙனம் வளர்கிற அக்குழந்தை தவழ்ந்துசென்று பெருமாள் அமுது செய்வதற்குத் திருமுன்பே கொணர்ந்து சமர்ப்பிக்கப்படுகிற அடிசிலைக் கைகளால் அள்ளி அளைந்து துழாவ பெருமாள் அதுகண்டு உகந்தருளி அந்த இன்னடிசிலை மிகவும் பிரியமானதாக அங்கீகரித்து அருள்வாராம். இப்படி ஸ்ரீரங்கநாதன் பட்டரை அபிமானித்துப் புத்திரஸ்வீகாரஞ்செய்தருளப் பெற்ற பாக்கியம் உடைமையால் அவர் `ரங்கநாதபுத்ரா' என்று அழைக்கப்பட்டார்.

## ஆழ்வான் தனது திருக்குமாரர்களுக்கு திருமந்த்ரார்த்தத்தை உபதேசித்தல்

ஆழ்வான் தாமே தமது குமாரர்களுக்கு திருவாய்மொழி முதலான அருளிச்செயல்களையும் பொருளையும் எடுத்துரைத்தார். `எண் பெருக்கந் நலத்து' (திருவாய்மொழி 1-2-10) என்ற பாசுரத்தின் அர்த்தத்தை விளக்குகையில் திருமந்த்ரார்த்தத்தை சொல்ல நேறிட்டது. திருமந்த்ரார்த்தத்தை ஆசாரியன் எம்பாரிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தார். ஆனால் உடனே `மின்னின் நிலையில மன்னுயிரக்கைகள்' (திருவாய்மொழி 1-2-2) என்ற பாசுரம் நினைவுக்கு வர, `அடுத்த நிமிடம் நீங்கள் உயிருடன் இருப்பீர்கள் என்பது நிலையில்லை ஆதலால் இப்போதே இச்சீரிய பொருளைக்கேட்டு நலனடையுங்கள்' என்று ஆழ்வான் பிள்ளைகளுக்கு திருமந்த்ரார்த்தத்தை உபதேசம் செய்தார்.

## பட்டருக்கு வேதாந்தாசர்யர் என்ற பெயர் ஏற்படக் காரணம்

ஒருநாள் எம்பெருமானார் பட்டருடைய வேதாந்த உபந்யாஸ வைபவத்தைக்கேட்டு உகந்து அவருக்கு `வேதாந்தாசார்யர்' என்ற சிறப்புப் பெயரைக் கொடுத்தருளினார்.

## நம்பெருமாள் எம்பெருமானாருக்கு ஆதிபத்ய பட்டமும், பட்டருக்கு இளவரசு பட்டமும் வழங்குதல்

எம்பெருமானாரும் பட்டரும் உலகம் முழுவதும் உய்யும்படி வடமொழி, தென்மொழி மறைகளை வியாக்கியானித்துக் கொண்டு உபய வேதாந்த ப்ரவர்த்னங்கள் செய்து வரும் திறத்தைக் குறித்து நம்பெருமாள் மிகவும் திருஉள்ளம் உகந்து `ஆசார்ய ஆதிபத்யத்தில் எம்பெருமானுருக்குப் பட்டாபிஷேகமும் பட்டருக்கு யுவராஜபட்டாபிஷேகமும் செய்யுங்கள்' என்று அடியார்கட்கெல்லாம் அர்ச்சகமுகமாக ஆஜ்ஞாபித்துத் திருப்பரியட்டம் திருமாலை முதலிய வரிசைகளை அனுப்பினார். நம்பெருமாளின் நியமனத்தின்படி தொண்டர்கள் அனைவரும் கூடிப் பெருமகிழ்ச்சியுடன் எம்பெருமானாரையும், பட்டரையும் ப்ரஹ்மரதத்தில் ஏற்றித் திருவரங்க நகர்வலம் வந்து திவ்விய சிங்காதனங்களில் இருவரையும் எழுந்தருளப் பண்ணி பல இடங்களிலிருந்தும் வருவித்த புண்யதீர்த் தங்களைக்கொண்டு மந்திர பூர்வமாக அபிஷேகம் செய்வித்து, முன்பு திருவயோத்தியிலிருந்தவர்கள் ஸ்ரீராமபிரானுக்கும், பரதாழ்வானுக்கும் பட்டாபிஷேகம் செய்ததுபோல, வெகு விமர்சையாக எம்பெருமானாருக்கு ஆசார்ய ஆதிபத்ய பட்டமும், பட்டருக்கு இளவரசு பட்டமும் சூட்டிக் களிகூர்ந்தார்கள்.

## எம்பெருமானார் இராமாயணத்தை செவிசாய்த்தல்

முன்பு திருவயோத்தியில் இராமர் தம் புத்திரர்களான லவகுசலர்களை இராமாயணத்தைக் கானஞ்செய்யச் சொல்லி கேட்டதுபோல், இலஷ்மணறின் ஆவதாரமாகிய இளையாழ்வாரும், பராசர பட்டரையும், வேதவியாஸ பட்டரையும் அழைத்து வால்மீகி இராமாயணத்தை படச்சொல்லி கேட்டு ஆனந்தமடைந்தார். அவர்கட்கு நல்ல சிறப்புக்கள் செய்தனுப்பினார்.

## எம்பெருமானார் பட்டரை தர்சனத்தலைவராக்குதல்

எம்பெருமானார் திருமேனி தளர்ந்தவராய் பரமபதமடையத்தீருவுள்ளமாகி தொண்டர்கள் அனைவரையும் அழைத்து பட்டரைகாட்டிக்கொடுத்து `இவரை நம்மைப் போலவே பார்த்துக் கொள்ளுங்கள்' என்று நியமித்தார். பிறகு பட்டரைப் பார்த்து `மேல்நாட்டில் (திருநாரயணபுரத்தில்) வேதாந்தி (மாதவசூரி) என்று ஒருபெரிய வித்வான் இருக்கிறார். நீர் அங்கேபோய் அவரைத் திருத்தி நம்தரிசனப் பிரவர்த்தகராக்கும்' என்று அருளிச் செய்தார்.

பட்டர் உபந்யாஸம் செய்கிறபோது விஷயங்களை நன்கு விளக்குவதற்குத் திருஷ்டாந்தமாகச் சில சிறு கதைகள் சொல்வதுண்டு. அவற்றில் ஒரு சுவையான கதையை கீழே காண்போம்.

தலையில் மயிரின்றிருப்பான் ஒருவன் நெற்களத்தில் தொழில் செய்து கொண்டிருந்தபோது அறிவு கூர்மை உடையவனான ஒரு யாசகன் அங்கே வந்து அவனை நோக்கி `நீர் குழலைப்பேணாதே தனியே நின்று தொழில் செய்கின்றீரே' என்று புகழ்ந்தான். அது கேட்டு அவன் `எதற்காக வந்தீர்?' என்று வந்தவனை வினவ அவனும் `கண்டு போக வந்தேன்' என்றான். அவனிடம் `ஒரு நெற்கோட்டையைக் கொண்டு போம்' என்று எடுத்துக்கொடுத்தனுப்பினான். அதனைக்கொண்டு போகும்போது, எதிரே வந்த ஒருவன் இது எங்கே பெற்றது? என்று வினவ, அவன் மொட்டைத்தலையன் தந்தான் என்று கூறினான். அதுகேட்ட வழிப்போக்கன் களத்துக்கு வந்து நெல்பரிமாறுகின்றவனைநோக்கி `இன்னான் உம்மை வைதுபோகின்றானே' என்று கோள் சொன்னான். அது கேட்ட அவன் `அடா என் நெல்லையும் கொண்டு என்னையும் வைதுபோவதோ!' என்று சினந்து நெற்கோட்டையைப் பறித்துக்கொள்ளக் கருதி அவனைத் தொடர்ந்தோடினான். அவன் அவ்வாறு ஓடிவருவதைத் திரும்பிபார்த்த இரவலன் அவன் அருகில் வந்தஉடன் `என்தான் ? குழல்கள் அலைய அலைய ஓடிவாரா நின்றதே!' என்று மீண்டும் புகழ்தான். அதைக்கேட்டவுடன் அந்த நெல்லுடையான் மிகவும் மகிழ்ச்சிகொண்டு `ஒன்றுமில்லை இன்னம் ஒருநெற்கோட்டை கொண்டுபோகச் சொல்ல வந்தேன்' என்றான். இந்நிகழ்ச்சியிலிருந்து யாம் அறிவது என்ன வென்றால் `இவ்வுலகத்தில் பேதையர் தங்கட்குச் சிறிதும் பொருந்தாத விசஷயங்களைப் பிறர் தங்கள் மேலேறிட்டுச்சொல்லித் துதித்தாலும் அவை தமக்குத்தகுதி அல்லனவென்று எண்ணி நாணம் கொள்ளாமல், அத்துதிமொழியை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு மனமுவந்து அவ்வாறு துதித்தவர்க்கு மிகுதியாகப் பொருள்கள் வழங்குவார்கள்.'

## நஞ்சீயரைத் திருத்தி பணிகொள்ளல்

எம்பெருமானாரின் திருவுள்ளத்தின்படி மேல்நாடு சென்றார். அங்கு இருந்தவர்கள் சொன்னதின்படி வேதாந்தியை சந்தப்பதற்கு மாறுவேடத்தில் சென்றார். ஒன்பது நாட்கள் வாதம் நடந்தது. பத்தாம் நாள் வேதாந்தி விசிஷ்டாத்வைத மதமே சிறந்தது என ஒப்புக்கெகாண்டு பட்டர் திருவடிகளில் சரணடைந்தார். பிறகு பட்டர் இவருக்கு பஞ்ஜசமஸ்காரங்களை பிராஸாதித்து ஸ்ரீரங்கம் திரும்பினார்.

## ஸ்ரீபெரியாழ்வாரும் ஸ்ரீபராசுரபட்டரும்

## பெரியாழ்வார் திருமொழி – நான்காம் பத்து 7ஆம் திருமொழி 9ஆம் பாசுரம்

வடதிசைமதுரைசாளக்கிராமம் வைகுந்தம்துவரை அயோத்தி
இடமுடைவதரியிடவகையுடைய எம்புருடோத்தமனிருக்கை
தடவரையதிரத்தரணிவிண்டிடியத் தலைப்பற்றிக்கரைமரம்சாடி
கடலினைக்கலங்கக்கடுத்திழிகங்கைக் கண்டமென்னும்கடிநகரே.

இந்தப்பாசுரம்போல் ஸ்ரீபராசுரபட்டர் அருளியுள்ள ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரத்தின் 8ஆம் ஸ்லோகத்தை இங்கே அனுபவிப்போம் (இந்த ஸ்லோகம் இராமானுஜரைப் பற்றியது)

ஸ்ரீரங்கம் கரிஸைலமஞ்ஜநகிரிம்
தார்சஷ்யாத்ரிஸிம்ஹாசலௌ
ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ்ச
பதரீநாராயணம் நைமிஸம் /
ஸ்ரீமத்த்வாரவதீப்ராயாக
மதுராயோத்யாகயா: புஷ்கரம்
ஸாளக்ராமகிரிம் நிஷேவ்ய
ரமதே ராமாநுஜோऽயம் முநி: //

## பெருமாள் பராசரபட்டருக்கு மேல்வீடுதருதல்

ஒரு கைசிக துவாதசியன்று பெருமாள் ஸந்நிதியிலே பராசரபட்டர் கைசிகபுராணம் வாசித்தருளிய அழகினில் மயங்கி, `பட்டரே ! உமக்கு மேல்வீடு தந்தோம்' என்று அருளிச் செய்ய, இவரும் மஹாப்ரசாதம் என்று அங்கீகரித்தருளி, பெருமாள் தம்மை விசேஷகடாக்ஷம் செய்தருளின உபகாரத்தைச் சிந்தித்து, `நாயன்தே! ஆசன பத்மத்திலே அழுத்தியிட்ட திருவடித்தாமரைகளும், அஞ்சேல் என்ற கையும், கவித்தமுடியும், முறுவல் பூரித்த சிவந்த திருமுகமண்டலமும், திருநுதலில் கஸ்தூரித் திருநாமும் பரமபதத்தில் காணாவில்லை என்றால், ஒரு மூலையடியே முறித்துக் கொண்டு குதித்து மீண்டும் வருவேன்' என்று சொல்லி, நம்பெருமாளையும் பெரியபெருமாளையும் ஆபாதசூடம் அநுபவித்து திருமாளிகைக்கு எழுந்தருளினார். நம்சீயரை இந்த தர்சனத்தின் தலைவராகநியமித்து, திருநாடு அலங்கரித்தார்.

## பட்டர் திருஅவதார தினத்தின் மகிமை

கூரத்தாழ்வானுக்கு பெரியபெருமாளின் க்ருபையால் வைகாசி மாதம் அனுஷ நட்சத்திரத்தில் இரு திருக்குமாரர்கள் அவதரித்தனர். நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களின் அர்த்த விசேஷங்களை உள்ளபடி உணர்ந்து வெளியிட வல்லவரானவர் பட்டர் என்பதற்கு அறிகுறியாக, இவர் அவதரித்த தினம் நம்மாழ்வார் திருஅவதரித்த வைகாசி விசாகத்திற்கு அடுத்த தினமாக அமைந்தது ஒரு ஏற்றமாகும்.

வார்த்தாமாலை – 88ஆம் வார்த்தை – பட்டர் திருவாராதனக் க்ரமம்-விவரணம்

பட்டர் சிஷ்யர் ஸோமயாஜியர் ஸோமயாகம் செய்து வேதத்தின் பூர்வபாகத்திலே ஊன்றி இருப்பர். ஒரு நாள் அவர் பட்டரிடம் எனக்குத் திருவாராதனக் க்ரமத்தை அருளிச் செய்ய வேணும் என்று கேட்டார். இப்படிப்பட்டவர்களுக்கு திருவாரதனம் விஸ்தாரமாய் இருந்தால் ஒழிய அதில் ப்ரதிபத்தி பிறக்காது ஆகையாலே, பட்டர் அவருக்கு விரிவாக உடையவருடைய நித்யக்ரமத்தில் சொல்லப்பட்ட திருவாராதன முறையை அருளிச் செய்தார். அவரும் அது கொண்டு நெடுநாள் திருவாராதனம் செய்து வந்தார். அவ்வாரு இருக்கும் சமயத்தில், ஒன்று இரண்டு நாட்கள் பட்டர் திருவாராதனத்தைச் சேவித்தார். அங்கு தமக்கு அருளிச் செய்தவை ஒன்றையும் கண்டிலர். பட்டர் திருவாராதனம் பண்ணியருளின க்ரமம் கீழ் வருமாறு:

பட்டர் திருவாராதனப் பெருமாள் திருநாமம் - தெற்காழ்வார். அந்த ஸ்ரீவைஷ்ணவர் அந்தப் பெருமாளுக்கு திருமஞ்சனம் பண்ணிச் சேலைசாத்தித் திருநாமம் சாத்தி அமுது செய்யத் தளிகை வைத்த அளவிலே, பட்டர் தெற்காழ்வாரை எழுந்தருளிவித்துக்கொண்டு வாருங்கோள் என்று சொல்லி, தமக்கு படைத்த திருப்போனகத்தையும், தண்ணீர் அமுதையும் அமுது செய்யப்பண்ணி வைத்து ப்ராஸதப்பட்டருளினார்.

இத்தைக் கண்ட அந்த ஸ்ரீவைஷ்ணவர் எனக்கு அருளிச் செய்தபடி ஒன்றும் தேவரீர் செய்யவில்லையே. இதற்கு காரணம் என்ன? என்று ஆர்த்தியோடே கேட்டார். அதற்கு பட்டர் எல்லா வேதஸாஸ்த்ரங்களையும் கொண்டு எம்பெருமானைப் பார்த்து, தரித்து நின்று நீண்ட நேரம் திருவாராதனம் பண்ணவல்ல உமக்கு, எம்பெருமானுடைய பெருமைக்கும், உம்முடைய வண்மைக்கும் பொருந்தும்படியாக விரிவான திருவாராதனக் க்ரமத்தை உபதேசித்தேன். எம்பெருமானைக் கண்டவுடன் ஆழ்வார்களைப்போலே, காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும் (பெரிய திருவந்தாதி 34ஆம் பாசுரம்) என்று தளர்ச்சியடையும் அடியேனுக்கு, இப்படிச் சுருக்கமான திருவாராதனக் க்ரமமே பொருந்தும் என்று அருளிச்செய்தார்.

மேலே சொன்ன விஷயங்கள் புத்தூர் ஸ்வாமி வெளியிட்டுள்ள ஆசார்ய வைபவமஞ்ஜரி நூலில் இருந்தும், ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ பதிப்பாசிரியர் வெளியிட்டுள்ள ஸ்ரீபராசர பட்டர் வைப நூலில் இருந்தும் எடுக்கப்பட்டது.

ஸ்ரீபட்டர் வைபவம் சொல்லி முடியாது. அதில் சிறியதை மேலே அனுபவித்தோம்.

ஸ்ரீபட்டர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: